பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

# The EELANADU

மலர்: 20 கார்த்திகை 4 துல்ஹஜ் 18 இதழ்: 280
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20-11-78

Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள், குறிப்புகள் முதலியன
CYCLO-STYLE செய்யவும்
போட்டோஸ்டாட் பிரதிகளுக்கும்
சுப்புகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## நிருபர்கள் மரணவிசாரணை அதிகாரிகளல்ல

(கொழும்பு)

பத்திரிகை நிருபர்கள் மரணவிசாரணை அதிகாரிகள் போன்று குறுக்குவிசாரணை செய்யாது மக்களின் குரலை எதிரொலிக்க வேண்டும் என்று கியூபா வெளிநாட்டமைச்சர் திரு. இஸிடோரோ மல்மியர் கப்பிலோவி பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று தாம் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தம்மை ஒரு பத்திரிகையாளன் என்றும் அறிமுகப்படுத்திய கியூபா வெளிநாட்டமைச்சர், பத்திரிகை நிருபர்கள் சரமாரியாகக் கேட்ட கேள்விகளின் பின்னரே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-இ)

# மற்றுமொரு விமானவிபத்து: இந்தியாவின் மலைப்பிரதேசத்தில் சம்பவம் 76 பேர் பலி

# ஒருவர் உயிர் தப்பினர்

(புதுடில்லி)

**நேற்றுக் காலை, லடாக்கில், லே விமான நிலையத்தின் அருகே இந்திய விமானப்படை விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 76 பேர் பலியானார்கள்! தெய்வாதீனமாக ஒருவர் மட்டும் உயிர் தப்பியுள்ளார்!**

மலைப்பிரதேசமான லடாக், இந்தியாவின் வடக்கு எல்லையில் இருக்கிறது இங்குள்ள (இந்தியாவின் மிக உயர்ந்த மலைப்பிரதேச விமான நிலையமான) லேயில் நேற்றுக்காலை இந்திய விமானப்படையின் போக்குவரத்து விமானம் தரையிறங்க முயற்சிக்கையில் விபத்து நிகழ்ந்தது இந்த விமானம் விழுந்து நொறுங்கியதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

விமானப்படையின் இந்த போக்குவரத்து விமானம், இராணுவ வீரர்களினதும் சிப்பந்திகளினதும் பிரயாணத்துக்காக தினசரி உபயோகப்படுத்தப்பட்டு வந்தது.

விபத்துக்குள்ளான விமானத்தில் ஏழு விமானச் சிப்பந்திகளும் எழுபது இராணுவ வீரர்களும் இருந்தனர்.

விபத்துக்குள்ளானதில் 75 பேர் உடன் பலியானார்கள் ஒருவரின் உயிர் தரையில் பிரிந்தது ஒருவர் மட்டும் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துக் கொண்டார்.

### நீதி விசாரணை

விமான விபத்துக் குறித்த நீதிமன்ற விசாரணைக்கு இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது

# வேகமாகச் சென்ற 10 சாரதிகள் கைது!

## மிதிபலகையில் சென்ற கண்டக்டருக்கும் அபராதம்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரத்தில் போக்குவரத்து அதிகமுள்ள வீதிகளில் அதிவேகமாக வாகனங்களை செலுத்திய 10 சாரதிகள் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர்.

பொலிஸ் போக்குவரத்து பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. என். சேனாதிராசா கூறினார்

இ. போ. ச. பஸ்களில் மிதிபலகையில் சென்ற மூவருக்கு தலா 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்

இவர்கள்மீது யாழ் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும் என்று யாழ் இவர்களில் ஒருவர் பஸ் கண்டக்டர் என்றும் அவர் தெரிவித்தார். [க]

# தமிழ் காங்கிரஸ் யாப்பில் முக்கிய திருத்தங்கள்!

## பொதுச்சபை முடிவு செய்யும்

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் காங்கிரஸ் யாப்பில் செய்யப்பட்டுள்ள முக்கிய திருத்தங்கள் பற்றி யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி 'மைற்' மண்டபத்தில் இம்மாதம் 26-ம் திகதி நடைபெறவிருக்கும் மாநாட்டில் தமிழ்க்காங்கிரஸ் பொதுச்சபை முடிவுசெய்யும்

மாநாட்டிற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுவருகின்றன பொதுச்சபை பிரதிநிதிகளுக்கான பிரவேசப் பத்திரங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன

வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்தும், கொழும்பிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் 25 உறுப்பினர்கள் வீதம் பொதுச்சபையில் இடம்பெறுவார்கள். இவர்களைத் தவிர வாலிப முன்னணி பிரதிநிதிகள் 25 பேரும் மாதர் முன்னணி பிரதிநிதிகள் 25 பேரும், தொழிற்சங்க பிரதிநிதிகள் 25 பேரும் இடம் பெறுவார்கள்

மட்டக்களப்பிலிருந்து சட்டத்தரணி ஏ தவராசா தலைமையிலும், திருக்கோணமலையிலிருந்து திரு பி சபாரத்தினம் தலைமையிலும், பொத்துவிலிருந்து ஆசிரியர் அ. நடராசா தலைமையிலும், வவுனியாவிலிருந்து திரு எம். பொன்னையா தலைமையிலும், முல்லைத்தீவிலிருந்து திரு.

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் 'அமிர்' - 'சிவா' வவுனியாவில் 26 ல் நடைபெறும்

(வவுனியா)

தமிழ் இளைஞர் பேரவையின் சிறப்புப் பொதுக் கூட்டத்தில் இம்மாதம் 26ம் திகதி தமிழர் கூட்டணித் தலைவர் திரு. எம் சிவசிதம்பரம், கூட்டணி செயலதிபர் திரு. ஏ அமிர்தலிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்

வவுனியாவில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரு எம் சிவசிதம்பரம் ''இன்றைய நெருக்கடியான அரசியல் நிலை'' என்ற தலைப்பிலும், திரு ஏ. அமிர்தலிங்கம் 'தமிழ் ஈழ விடுதலையில் உலகத் தமிழரதும், உலக நாடுகளதும் பங்கு'' என்ற தலைப்பிலும் உரைநிகழ்த்துவார்கள்

அன்று மாலை வவுனியா நகரசபை மைதானத்தில் தமிழ் இளைஞர் பேரவையின் பகிரங்க பொதுக் கூட்டம் நடைபெறும்

இக்கூட்டத்தில் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள், மகளிர் பேரவை உறுப்பினர்கள், தொழிற்சங்க உறுப்

(6-ம் பக்கம் பார்க்க)

# தைமுதல் 3 கட்டங்களாக உள்ளூராட்சித் தேர்தல்கள்

[கொழும்பு]

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் 3 கட்டங்களாக ஜனவரி மாதம் முதல் நடைபெறவிருக்கின்றன

பிரதமரும் உள்ளூராட்சி அமைச்சருமான திரு ஆர் பிரேமதாசா இதற்கான அரசின் அங்கீகாரத்தைப்பெற்றுள்ளார்

முதல்கட்டமாக ஜனவரி மாதம் 10 மாநகரசபைத் தேர்தல்களும் 33 நகரசபைத் தேர்தல்களும் நடைபெறும். இந்த உள்ளூராட்சி மன்றங்கள் சுதந்திரதினமான பெப்ரவரி 4ம்திகதி செயல்பட ஆரம்பிக்கும்.

இரண்டாவது கட்டமாக அடுத்த வருடம் ஜூன் 138 பட்டினசபைத் தேர்தல்கள் நடைபெறும்.

கடைசிக்கட்டமாகக் கிராமசபைத்தேர்தல்கள் நடைபெறும். கிராமசபைகள் தற்போதுள்ள சிறியபட்டினசபைகளைக் கலைத்தும், சில கிராமசபைகளை உட்படுத்தியும் உருவாக்கப்படும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சி கட்டுப்பணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.

சுயேச்சை வாதிகளும் அங்கீகரிக்கப்படாத அரசியல்கட்சி அபேட்சகர்களும் மாநகர சபைக்கு 500 ரூபாவும் நகர சபைக்கு 250 ரூபாவும் கட்டுப்பணமாகச் செலுத்தவேண்டும். [க-அ]

## பாகிஸ்தான் வெற்றி

(கராச்சி)

நேற்று இங்கு நடைபெற்று முடிந்த 3-வதும் இறுதியுமான இந்திய — பாகிஸ்தான் கிரிக்கெட் டெஸ்டில், பாகிஸ்தான் எட்டு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. ஸ்கோர் விபரம்:

இந்தியா: 344, 300. பாகிஸ்தான்: 481-9, 164-2

நடைபெற்ற மூன்று டெஸ்டுகளில் பாகிஸ்தான் இறுதி இரண்டு டெஸ்ட்களில் வெற்றி பெற்றுள்ளது. முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## சுவீப் முடிவு!

(கொழும்பு)

பெந்தேட்டையில் நேற்று இழுக்கப்பட்ட 60-வது இலங்கை தேசிய சுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:-

1-வது பரிசு:
**24 R 0582**
ரூபா 1,00,000

2-வது பரிசு:
**12 Q 0859**
ரூபா 40,000

3-வது பரிசு:
**23 H 0539**
ரூபா 10,000

இவை தவிர 100 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா ரூபா 1694 சதம் 10 வழங்கப்பட்டுள்ளது. (ம)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பண்ணாகம் தெற்கு, கிருஷ்ணபிள்ளை நடராசா
வழக்காளி

இல° ஈடு/ 1089 எதிராக
வட்டுக்கோட்டை கிழக்கு- பிளவத்தை, கிருஷ்ணர் தாமோதரம் பிள்ளை ஆசிரியர் சொந்தச் சார்பிலும், இறந்த 2 ஆம் எதிரி தாமோதரம்பிள்ளை பெண் விசாலாட்சியின் சொத்துக்களுக்குச் சட்டபூர்வ பிரதிநிதி என்ற முறையிலும் எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/1089 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள், 1978 ஆம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 29 ஆம் திகதி (29-11-78) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிக்களுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 4375/-ம் இதில் ரூபாய் 3000/-க்கு 13-2-76 திகதி தொடக்கம் 18-6-76 திகதி வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 9 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 749-60 சதமும். இதில் 23-3-77 இல் ரூபாய் 1000/-ம் மேலும் 1-2-78 இல் ரூபாய் 1000/-ம் இறுபட்டது

### காணியின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை ''வேலவுடை'' திலப்பரப்பு 11-ம், குளி 3½ம், வான்பயிர் செய்பயிர்களும்; எல்லை கிழக்கு ஒழுங்கையும், வயிரமுத்து தம்பிநாயகத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும். வடக்கு வயிரமுத்து தம்பிநாயகத்திற்கும் பங்காளருக்கும் கனகசபை தம்புவுக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு, இதன்கீழ் விபரிக்கப்படும். 2 ஆம் ஆதனம், தெற்கு, நாகமுத்து இராசையாவுக்கும் பெண் பாக்கியத்திற்கும் உரிய ஆதனம். இதடங்கலும்.

2 மேற்படி இறை ''செழியனுடையும், வேலவுடையும்'' திலப்பரப்பு 6-ம், குளி 14½ம், வான்பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு, நாகமுத்து இராசையாவுக்கும் பெண் பாக்கியத்துக்குமுரிய ஆதனமும், மேற்காட்டிய 1-ஆம் ஆதனமும், வடக்கு, கனகசபை தம்புவுக்குரிய ஆதனம் மேற்கு, அப்புக்குட்டி கந்தையா கைம்பெண் செல்லம்மாவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு, கனகரத்தினம் பெண் நாகேஸ்வரிக்குரிய ஆதனம், இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்காப்பிள்ளை,
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்

தெல்லிப்பழை,
30-9-78.
082

---

சாவகச்சேரி நகரசபை

## கேள்விப்பத்திர விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகட்கு இந்நகரசபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

### வேலைகள்

01. முருகமூர்த்தி ரேட் கல்லுப் போட்டுத் தார் போடுதல்
02 டச்சு வீதி '' '' ''
03. காளிகோயில் வீதி '' '' ''
04. இராமலிங்கம் வீதி '' '' ''
05 ஸ்ரேசன் ஒழுங்கை '' '' ''
06. கண்டுவில் இரண்டாம் ஒழுங்கை '' '' ''
07. புதுச்சந்தை வீதி '' '' ''
08. பவுண்டரி வீதி '' '' ''
09. மில் ரோட் '' '' ''
10. பெரிய அரசடி ஒழுங்கை கிரவல் பரவுதல்
11. உட்புக்கேணி வீதி '' ''
12. மடத்தடி ரோட் '' ''
13 வேலுப்பிள்ளை ரோட் '' ''
14. மகளிர் கல்லூரி வீதி '' ''
15. பண்டாரி வெளிவாய்க்கால் வீதி கிரவல் இடுதல்
16. நுணுவில் கல்வயல் வீதி 1-ம் ஒழுங்கை ''
17 கததாப்படி வீதி 2-ம் முறை தாரிடுதல்
18. கற்குளி 3-ம் ஒழுங்கை 2-ம் முறை தாரிடுதல்
19. குசவமடம் ஒழுங்கை வட் 3 கல்லுப் போட்டு கிரவல் பரவுதல்.

கேள்விப்பத்திரங்கள் 04-12-78-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் இந்நகரசபை அலுவலகத்தில் கேள்வி ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- வைப்புப் பணமாகவும் கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 5/- கேள்விப்பத்திரக்கட்டணமாகவும் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் காகித உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக இவ்வேலைக்குரிய பெயரை எழுதி விசேட ஆணையாளர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிடப்பட்டு டிசம்பர் மாதம் 7-ந் திகதி முற்பகல் 12-00 மணிக்கு முன் இந்நகரசபையின் சபாமண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடப்படல் வேண்டும்

இதைப்பற்றிய விதிகளும் விபரங்களும் இன்னும் அறிய விரும்பின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
16-11-78.
0828

---

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

## ஏழாலை மகாஜன பாடசாலை புதிய அதிபருக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்திற்கு நீண்ட பாரம்பரியமுண்டு. சைவத்தையும், தமிழையும் வளாப்பதையே நோக்கமாகக்கொண்டு அது தாபிக்கப்பெற்றது. தமிழ் வளர்த்த தாமோதரனார் என்று புகழப்படுகின்ற அமரர் சி வை. தாமோதரம் பிள்ளை, சுன்னாகம் குமாரசாமி புலவர் போன்ற தமிழ்ப் பேரறிஞர்கள் இவ்வித்தியலயத்தின் ஆதித் தாபகர்கள்'' என்று ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்தின் புதிய அதிபராக நியமிக்கப்பெற்ற தம்மை வரவேற்குமுகமாக ஏழாலை வடக்கு, கிழக்கு அபிவிருத்திச் சனசமூகநிலையத்தினரால் நடாத்தப்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் திரு த திருநாவுக்கரசு (நாவேந்தன்) குறிப்பிட்டார்

கூட்டத்திற்கு திரு சத்தியநேசன் தலைமைவகித்தார்

திரு நாவேந்தன் தொடர்ந்து பேசுகையில், ''தாமோதரம்பிள்ளை, குமாரசாமிப் புலவர் ஆகியோரின் அடிபெற்றி, அமரர் க நடேசபிள்ளை, இப்பாடசாலையை உண்மையான கல்வித்தாபனமாக உருவிலும், செயற்பாட்டிலும் உருவாக்கினார் தமிழறிஞரான நடேசபிள்ளையை இவ்வேளையில் நாம் நன்றியுடன் நினைவுகூருவோம் இப்பெரியார்களது இலட்சியத்திற்கு ஏற்றவகையில் இன்றைய கல்வியதிபதியினதும், மாவிப்பாய் பாராளுமன்ற உறுப்பினரதும் ஆதரவுடன் நான் இப்பாடசாலையை முன்னேற்றுவதற்கு முயல்வேன்'' என்றார்.

திரு. பாக்கியநாதன் பேசுகையில், ''புதிய அதிபர் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், அனுபவம் மிக்கவர் அவர் தமது திறமையைப் பயன்படுத்தி இப்பாடசாலைக்கு மின்சார வசதியும், குழாய்நீர் வசதியும் பெற்றுத் தரவேண்டும்'' என்றார்

பாடசாலைப் பழைய மாணவர்களில் ஒருவரான மூ. கௌரிகாந்தன் பேசுகையில், ''புதிய அதிபர் மிகத் திறமையான ஆசிரியர் அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் உயர் நிலையிலுள்ளனர். அவர் தமது வருமானத்தைக் கருதிக் கல்விப் பணி செய்வதில்லை மாணவர்களின் நலன்களை முன்வைத்தே உழைப்பது அவர் இயல்பு அவர் எங்களுக்குப் பிரத்தியேகமாக நடத்திய வகுப்புகளுக்கு எவ்வித சன்மானத்தையும் பெற மறுத்துவிட்டார் இப்பண்புகளினால் அவரது மாணவர்கள், அவரைத் தமது வழிகாட்டியாகவும், ஆசானாகவும் மதித்து வருகிறார்கள்'' என்றார்.

ஆசிரியர் திரு மு. நவரத்தினம், திரு ரி. கே செல்வநாயகம், திரு க. குணசிங்கம் உட்பட மற்றும் பலரும் கூட்டத்தில் பேசினர் சு. காந்தி நன்றியுரை நிகழ்த்தினார்.

---

## வெற்றிடம்

### கணக்காளர் தரம் II

எமது சங்கத்தின் கணக்காளர் பதவிக்கு கீழ்வரும் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் ''தலைவர், கரைச்சி தெற்கு ப நோ. கூ சங்கம், கிளிநொச்சி'' என்ற விலாசத்திற்கு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கோரும் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் 30-11-78ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

1. கணக்காளர் தரம்/II

தகைமைகள்:

1. ஒரு வருட கால அனுபவத்துடன் கணக்கியலினை ஒருபாடமாகக்கொண்ட பட்டதாரி, அல்லது
2. ஒரு வருட கால அனுபவத்துடன் கொழும்பு கிரேட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்கியலில் பெற்ற டிப்புளோமா, அல்லது
3. கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப் பத்திரத்துடன், அத்தகைய ஓர் நிறுவகத்தில் பெற்றுள்ள இரண்டு வருட கால அனுபவம், அல்லது
4. 7 வருட கால அனுபவம் பொருந்திய முன்னைநாள் கூட்டுறவுப்பரிசோதகர்.

சம்பள அளவுத்திட்டம்:
400/- 650/-
15X10 20X5

வயது:
25—45 வரை.

தலைவர்,
கரைச்சி தெற்கு ப நோ.
கூ. சங்கம்,
கிளிநொச்சி.
0830

---

நெல்லியடிப் பட்டினசபைபொதுநூல் நிலையத்தில்மேல்மாடிக் கட்டிடம் அமைத்தல்

## கேள்வி விளம்பரம்

1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் திகதி மு ப 10-30 மணிவரை நெல்லியடிப் பட்டினசபையின் விசேட ஆணையாளரால் நெல்லியடிப் பொதுநூல் நிலையத்தில் மேல் மாடிக் கட்டிட அமைப்பு வேலைக்கு ரூபா 25,000/- மேல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பிணைப்பணம் ரூபா 1000/-ம் (திருப்பிக்கொடுக்கப்படும்) பத்திரப்பணம் ரூபா 25/-ம் செலுத்தியதின்பேரில் 8-12-78ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப 3-00 மணிவரை எம்மால் வழங்கப்படும் பத்திரத்தில் கேள்விகள் அனுப்பப்படவேண்டும்.

மேலும் விபரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ப. ம. ஜோசப்
விசேட ஆணையாளர்,
நெல்லியடிப்பட்டினசபை.

நெல்லியடிப்பட்டினசபை
அலுவலகம்,
கரவெட்டி,
16-11-1978
0821

---

[illegible]

### விற்பனைக்கு

நல்லூர் சந்தைக்கருகாமையில் ரோட்டு முகப்புடன் மா, பலா, தென்னை, பனை மரங்களுடைய 6 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். 274/2 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்.
0835

### வெற்றுச்சாக்கு விற்பனைக்கான கேள்வி விண்ணப்பப் பத்திரம்

கரைச்சி வடக்கு ப. நோ. கூ சங்கத்தில் விற்பனைக்கு உள்ள பலசரப்பட்டவெற்றுச் சாக்குகளையும் விற்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் ''தலைவர், கரைச்சி வடக்கு ப நோ கூ. சங்கம், பரந்தன்'' என விலாசமிடப்பட்டு கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் ''வெற்றுச் சாக்கு விற்பனை'' என எழுதப்பட்டு 25-11-78 காலை 10 மணிக்கு முன் கிடைக்க கூடியதாக பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படவேண்டும்.

வைப்புப்பணம் ரூபா 100/- கட்டி விண்ணப்பப் பத்திரங்களைச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம்
தலைவர்

பொதுமுகாமையாளர்,
கரைச்சி வடக்கு
ப நோ. கூ. சங்கம்,
பரந்தன்,
16 11-78.
0825

### இலங்கையில் ஒலிவர்

[கொழும்பு]

இலங்கையின் முன்னாள் தேசாதிபதி சேர்ஒலிவர் குணதிலகா நீண்டகால இடைவெளிக்குப்பின் நேற்று முன்தினம் நாடு திரும்பினார்.

86 வயதான இவர் மிகவும் பலவீனமடைந்திருந்தமையினால் விமானத்திலிருந்து கதிரையில் தூக்கிச் செல்லப்பட்டு, கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பிற்கு அம்புலன்ஸில் கொண்டு வரப்பட்டார். (க-அ)

---

## சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பெற்றோர் தினவிழா

25-11-78 சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி

பிரதம விருந்தினர்

மாண்புமிகு திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்
(தேசியப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர்)
திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள்

பெற்றோர், பழைய மாணவர்,
நலம் விரும்புவோர் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

0837
அதிபர்.

---

## G C E A/L மீட்டற் பயிற்சி 1979 APRIL

நடைபெறுகின்றது.

பாடம்:- தூயகணிதம் -- பிரயோக கணிதம்
ஆசிரியர்-: ஈசன் -- A. பத்மநாதன்
New A/L (H. N. C. E.) & A/L
1979, 1980 ஆகஸ்ட் பரீட்சைக்குரியதும்
1980 ஏப்ரல் பரீட்சைக்கான தூயகணிதம்
பிரயோக கணிதம் ஆரம்பம் 25-11-1978

இடம்:
BARINGTANS TUTORIAL COLLEGE
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
0838

# வரிமுறையை எளிதாக்கி மீளமைப்புச் செய்யப்படும்

## பாராளுமன்றத்தில் நிதியமைச்சர்

நாட்டிலுள்ள வரிமுறையை எளிதாக்கி மீளமைப்புச் செய்வதற்குத் தாம் உத்தேசித்துள்ளதாக நிதிஅமைச்சர் திரு ரெனி டி மெல் கடந்த 15ம் திகதி பாராளுமன்றத்தில் அடுத்தஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்துப் பேசுகையில் தெரிவித்தார். அவர் பேச்சு வருமாறு:

நான் ஏற்கனவே சமர்ப்பித்துள்ள 1979ம் ஆண்டிற்கான வரைவு வரவுசெலவு மதிப்பீடுகளின் அடிப்படையில் அரசாங்கத்தின் மொத்த மீண்டுவருஞ் செலவினம் 1071 5 கோடி ரூபாவாகும் இது, அங்கீகரிக்கப்பட்ட 1978ம் ஆண்டிற்கான மதிப்பீடுகளைவிட 61 2 கோடி ரூபாவினால் கூடுதலானதாகும். 1979ம் ஆண்டிற்கான மொத்த ஆக்கப்பொருட் செலவினம் 866 2 கோடி ரூபாவாகும் இது 1978 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் ஏற்பாடு வழங்கப்பட்ட தொகையைவிட ஏறத்தாழ 280 கோடி ரூபாவினால் கணிசமான அளவில் கூடுதலானதாகும். நடப்பு வருமான ஆண்டில் நெல் சந்தைப்படுத்தற் சபைக்கு வழங்கப்பட்ட முற்பணங்களின் மீள் கொடுப்பனவு காரணமாக முற்பணக் கணக்குகளின் பேரிலான தேறியநிலை 20கோடி ரூபாவினைக்கொண்ட பெறுகையைக் காண்பிக்குமென நான் எதிர்பார்க்கிறேன் முற்பணக் கணக்குகளின் மீண்டுவருஞ் செலவினம் ஆகிய இரண்டினதும் தேறிய மொத்தச் செலவினம் 1978 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில வழங்கப்பட்ட ஏற்பாட்டைவிட ஏறத்தாழ 339 5 கோடி ரூபாவினால் அல்லது 21 சதவீதத்தினால் கூடுதலானதாகவிருக்கும் இதன்படி செலவினத்தின் அதிகரிப்பில் பெரியவொரு பகுதி 1979ஆம் ஆண்டில் ஆக்கப்பொருட் செலவினத்திற்கு பகிர்வு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம்

1979ஆம் ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினத்தின் பெரிய ஆக்கக்கூறுகளை பின்வருமாறு சுருக்கிக் கூறுகிறேம்.

ஆளுக்குரிய வேதனாதிகள் 65 8 கோடி ரூபா.

உணவு உதவிப் பணம் 233 5 கோடி ரூபா

அரசாங்கக் கடனின்மீதான வட்டி 165 3 கோடி ரூபா.

ஓட்வூதியங்கள் 60 0 கோடி ரூபா

பிற மீண்டுவருஞ் செலவினம் 356 9 கோடி ரூபா.

1071 3 கோடி ரூபாவினைக் கொண்ட மொத்த மீண்டுவருஞ் செலவினத்தில் ஏறத்தாழ 31 சத வீதம் உணவு உதவிப்பணம், ஓய்வூதியங்கள், அரசாங்ககடன் மீதானவட்டி ஆகியவற்றின் பேரில் செலவழிக்கப்படவுள்ளது இந்தக் கைமாற்றல் முறைக்கொடுக்கல்களைத் தவிர உரம், பெற்றோலியம், இ போ. ச பால் சபை, தேசிய சேமிப்பு வங்கி, வருமான ஆதாரத்திட்டம் ஆகியவற்றின் தொடர்பிலான மேற்பட்ட உதவிப்பண விடயங்கள் வரைவு மதிப்பீடுகளில்உள்ளன உணவு உதவிப்பணத்துடன்சேர்த்து இந்த உதவிப் பணங்கள் மொத்த மீண்டுவருஞ் செலவினத்தின் 37 சதவீதமாகும் 1978ஆம் ஆண்டில் உணவு உதவிப் பணத்தைக் கட்டுப்படுத்துவதற்கான எமது முயற்சிகளுக்கு எதிர்மாறாக உதவிப் பணங்களின் மொத்தத் தொகை மொத்த மீண்டுவருஞ் செலவினத்தின்உயர்ந்த விகிதத்தைத் தொடர்ந்தும் வைத்திருக்கிறதென்பதையே இது காட்டுகின்றது. வழக்கமான 2 சத வீதக்குறைச் செலவினத்திற்கு இடமளித்தபின் 1979ஆம் ஆண்டிற்கான மொத்த மீண்டுவருஞ் செலவினம் 1030 1 கோடி ரூபாவாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடன்தீர் நிதியத்திற்கும் கடன்மீள கொடுப்பனவுகளுக்குமான ஏற்பாடு நீங்கலாக 1979ஆம ஆண்டில் ஆக்கப்பொருட் செலவினம் 733 4 கோடி ரூபாவாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வழக்கமான 20 சதவீதக் குறைச்செலவினத்திற்கு இடமளித்தபின் கடன்தீர் நிதியத்தையும் மீள் கொடுப்பனவுகளையும் தவிர்த்து ஆக்கப் பொருள் வரவு செலவுத்திட்டத்தின் அளவு 586 8 கோடி ரூபாவாகவிருக்கும்.

### இறக்குமதித் தீர்வை

1979ஆம் ஆண்டிற்கான வருமானத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கு முந்திய மதிப்பீடு 1135 3 கோடி ரூபாவாகும். இது 1978ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திலுள்ள வருமான மதிப்பீடுகளை விட 52·3 கோடி ரூபாவினைக் கொண்ட அல்லது 5 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது வியாபார மொத்தவரி, புகையிலை வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானங்கள சராசரி அதிகரிப்புகளைவிட கூடுதலானவைகளாகவிருக்குமென எதிர்பார்க்கப்படும் வேளையில் ஏற்றுமதி அறவீடுகள் 1978ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளிலுள்ள ஏறத்தாழ அதே தொகைகளைக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 1978ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட எதிர்பார்ப்பைவிட இறக்குமதித் தீர்வை வருமானங்கள மிகக்கூடுதலாக அதிகரிக்குமென நாம் எதிர்பார்க்கவில்லை, ஏனெனில் தளர்த்திட்டின் தாக்கம் பெருமளவில் நடப்பாண்டிலேயே உணரப்படுமென்பதனாலாகும்.

மீண்டுவருஞ் செலவினத்திற்கு மேலாகவுள்ள வருமானத்தின் மிகையாகவுள்ள கூட்டு விளைவான நடைமுறைக் கணக்குமிகை 105.2 கோடி ரூபாவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்பாடு வழங்கப்பட்டுள்ள ஆக்கப் பொருட் செலவினத்தின் உயர்ந்த அளவு இந்த நடைமுறைக் கணக்கு மிகை ரூபாய்க்கடன்களுடனும் வெளிநாட்டுக் கடன்களுடனும் சேர்ந்து ஆக்கப்பொருட் செலவினத்திற்கு முழுமையாக நிதியளிக்கக் கூடியதாகவிருக்கும் 1978ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திலுள்ளதைப்போலன்றி நடைபெற்றுக்கொண்டிருக்கும் கருத்திட்டங்களுடன் ஒப்பு நோக்குகையில் புதிய கருத்திட்டங்களுக்கு 1979-ம் ஆண்டில் கணிசமான அளவில் மூலவளங்களின் உயர்ந்த தொகைக்கு நாம் ஏற்பாடு செய்யக்கூடியதாகவிருந்தது கடந்த ஆண்டில் நான் எனது வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டதுபோல எமது ஏற்றுமதித்துறையின் செயலாற்றுகை எமது இலக்கு குறிக்கப்பட்ட வருமானம், செலவினங்களின் தொடர்பிலான எமது எதிர்பார்ப்புக்களுக்கு அதிமுக்கியத்துவமுடையதாகவிருந்தது. இத்தொடர்பிலான எந்த உறுதியற்ற நிலையும் வருமானம், செலவினங்கள் சம்பந்தமான எமது எதிர்பார்ப்புகளுங்கூட இப்போதைகளுக்கமைவாக திருத்தப்படவேண்டுமெனப் பொருள்படும்.

இதன்படி 1979ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை 614.4 கோடி ரூபாவாகவிருக்கும்,

எனக்கு முன்னமர்ந்தவர்களின் வழக்கமான பணி வரவு-செலவுத்திட்டத்தைச் சமப்படுத்துவதற்கு உத்தேசங்களைச் செய்வதாகவிருந்த வேளையில் இன்று எனது பணி கடந்த ஆண்டில் செய்யப்பட்ட எனது வரவு-செலவுத் திட்ட உரையின்படி நாம் பொறுப்பேற்றுள்ள நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதை உள்ளடக்கியதாகவுள்ளபடியினால் கூடுதலான அடிப்படை இயல்பினைக் கொண்டதாகவுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எனது முதனிலைப்பட்ணி கூடுதலான சிறந்த சென்மதி நிலுவைகளை மேம்படுத்துவதற்கும் சில செலவினங்களின் உள்ளமைப்பு விரிவாக்க அம்சங்களை மட்டுப்படுத்தக்கூடியவிதத்தில் அரசாங்கத்தின் மீண்டுவருஞ் செலவினங்களை மீளமைப்பதற்குமான எமது ஏற்றுமதித்துறைக்கு மீளுயிரூட்டக்கூடியவிதத்தில் உத்தேசங்களை உருவாக்குவதாக இருக்கும். முதலீடு செய்வதற்கும் வளர்ச்சிக்குமான பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்துவதன்பொருட்டு இந்நாட்டில் வரிமுறையை எளிதாக்கி மீளமைப்புச் செய்வதற்கும் நான் உத்தேசித்துள்ளேன். (அ)

## "நம்நாட்டு உற்பத்தி தன்னிறைவைத் தருகையில் இறக்குமதி தானாக நின்றுவிடும்"

[சங்கானை]

"நாட்டின் பொருளாதார வளர்ச்சி விவசாயிகளிடமே தங்கியுள்ளது அவர்களின் கடின உழைப்பாலேதான் பணத்தை மிச்சப்படுத்த முடியும். உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக அவைகளை வெளிநாட்டிலிருந்து அரசாங்கம் தருவிக்க வேண்டியநிலை உருவாகியுள்ளது, விளைபொருள் உற்பத்தியில நாடுதன்னிறைவு காணும்போது தருவிக்கப்படும் பொருட்கள் தானாகவே நிறுத்திவைக்கப்பட்டுவிடும்"

இவ்வாறு வலி. மேற்குப் பகுதி பெரும்பாக உத்தியோகத்தர் திரு எஸ். தவராஜா விதை உருளைக்கிழங்கு விநியோகம்பற்றிய கருத்தரங்கிறகுத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; 'வடபகுதி விவசாயிகள் ஒரு போகத்தில் தான் உருளைக்கிழங்கு நாட்டுகிறார்கள். ஆனாலும் நாம் அமோக விளைச்சலைப் பெறக்கூடியவகையில் அதனைசெய்கை பண்ணவேண்டும். அதற்காகவே இங்கு பரீட்சிக்கப்பட்ட இனகிழங்கு விதைகளை விவசாய பகுதியினர் தருவிக்கவுள்ளனர் இதில் விவசாயிகள் தாம்பெறும் கிழங்கின் அரைவாசிக்கான பணத்தை முன்னோடியாக விவசாய அதிகாரிகளிடம் செலுத்தவேண்டும்"

சண்டிலிப்பாய் தொட்டிலடி சன சமூக நிலையத்தில் இக் கருத்தரங்கு நடைபெற்றது பங்குபற்றிய விவசாயிகள் தமக்கு தேவையான 'ஆகா' இனகிழங்குகளில் தேவையான பருமனுள்ள சிறந்த இனத்தை வழங்கினால் தாம் நாட்டில் முன்னோடியாக அமோக விளைச்சலைபெற்று ஓர் புதிய சாதனையை நிலைநாட்டுவர் எனவும். எனவே அரசும் அதன்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ள அதிகாரிகளும் இதில் அக்கறை கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர். பயிர்ச் செய்கைஉத்தியோகத்தர் திரு, எம். சதிவேலுவும் கலந்து கொண்டார். [உ]

## 'அமிர்'- அமைச்சர் வாக்குவாதம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணையின் போது எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ அமிர்தலிங்கத்துக்கும் தொழிலமைச்சர் காட்டன் செனவரத்னவுக்குமிடையேநிகழ்ந்த வாக்குவாதத்தின் விபரம்:

அமிர்: விமான விபத்து குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக பத்திரிகைகள் மூலம் அறிந்தேன். கட்டுநாயக்கா விமானநிலையத்தில் முக்கிய கருவிகள் பழுதடைந்துள்ளன என்று பத்திரிகைச்செய்தி ஒன்று கூறுகிறது. எனவே இவ் விபத்து குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படவேண்டும்.

தொழிலமைச்சர்; பொறுப்பான பதவி வகிக்கும் எதிர்க்கட்சித்தலைவர் பொறுப்பற்ற விதத்தில் பேசக்கூடாது.

அமிர்: என் பொறுப்பை நான் உணர்வேன். பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஏன் கலவரமடைகிறார். (சபையில் கூச்சல்)

அமைச்சர்: நீங்கள்பொறுப்பற்று பேசுவதை ஆட்சேபிக்கிறேன்.

அமிர்: எனக்கு பொறுப்பும் கடமையும் உண்டு

அமைச்சர்: நீங்கள் அதை மறந்து பேசுகிறீர்கள். துரதிஷ்டவசமான அச்சம்பவத்தை அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்த முயற்சிக்கிறீர்கள்.

அமிர்: அப்படி நான்செயல்படவில்லை சம்பவம் குறித்து பூரணவிசாரணை வேண்டும் என்றே கேட்கிறேன்.

அமைச்சர்: அதற்குத்தான் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளாரே பின்னர் ஏன நீங்கள் அது பற்றி இங்கு விவாதிக்கிறீர்கள்?

அமைச்சர்: (சபாநாயகரைப் பார்த்து) நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக்கிளப்புகிறேன்.

கூட்டணி எம்.பிக்கள்: உங்கள் பிரச்சினையே ஒழுங்காக இல்லையே.

அமிர்: ஜனாதிபதி விசாரணைக்கு உத்தரவிட்டால் நாம் இச்சபையில் அது பற்றி பேச முடியாதா? (இதை திரு அமிர்தலிங்கம் சபையின் இரு புறமும் திரும்பி உரத்த தொனியில் கூறினார்.

அமிர்: இச்சபையில் எந்தப் பிரச்சினைகுறித்தும் பேசஉரிமை உண்டு (சபையில் கூச்சல்)

சபாநாயகர்: அமைதி! அமைதி!! எதிர்க்கட்சித்தலைவர் பிரச்சினையை கூடியளவு விரிவுபடுத்தாமல் பேசவும்

சிலாபம் எம் பி திரு ஹரேந்திர கொரியா: நான் ஒரு ஒழுங்குப்பிரச்சினையைக் கிளப்புகிறேன். கமிஷன் விசாரணை நடைபெறும் ஒருவிஷயம்பற்றி இங்கு பேசமுடியுமா?

நல்லூர் சிவா: அது என்ன நீதிமன்றமா? கமிஷன் விசாரணை குறித்து இங்கே விசாரிக்கத் தடையில்லை.

(பின்வரிசை உறுப்பினர்கள் கூச்சல்)

அமிர்: முடிந்தவரை யில் நன்றாகக் கூச்சலிடுங்கள். கூச்சலால் உண்மையை மறைக்கமுடியாது (மீண்டும் கூச்சல்)

அமிர்: நரிகள் ஊளையிடுகின்றன நன்றாக ஊளையிடட்டும்

இருபக்கத்திலும் பின்வரிசை உறுப்பினர்கள் எழுந்து நின்று சபாநாயகரை பார்த்து அக்கூற்றை வாபஸ்பெறவேண்டும் என்று கோரினர்

ஒரு குரல்: அவர் ஒரு புலி! (சிரிப்பு

சிறிமா: (அமிரைப்பார்த்து) நீங்கள் வாபஸ் பெறவேண்டாம்

சபா; எதிர்க்கட்சி தலைவர் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது தயவு செய்து அந்த வார்த்தையை வாபஸ் பெறுங்கள்.

அமிர்: அவர்கள் இனிமேல் கூச்சலிட மாட்டார்கள் என்றால் வாபஸ் பெறுகிறேன்.

சபா: நீங்கள் வாபஸ் பெறுவீர்கள் என்று கருதுகிறேன்

அமிர்: நீங்கள் கேட்டபடியால் வாபஸ்பெறுகிறேன்

(ம-இ)

## யாழ். நகர் ஜும்மா மஸ்ஜிதில் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

இஸ்லாத்தின் இறுதிக் கடமையான புனித மக்காவுக்குச் சென்று, ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றிய பின்னர் தாய்நாடு திரும்பும் வழியில் விபத்தில் சிக்கி உயிர் நீத்தவர்களுக்காக விசேட பிரார்த்தனைகள் யாழ்நகர ஜும்மா மஸ்ஜிதில் நடைபெற்றன.

இவ்வைபவத்தில் உரைநிகழ்த்திய அகில இலங்கை கதீப்மார்கள் சங்கத்தின் தலைவர் மௌலவி கே எம். எச் காலிதீன், "அல்லாஹ்வின் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு புனித பயணத்தில் உயிர்நீத்த ஹஜ்ஜாஜிகளுக்கு, புனித ஜிஹாதின பலன் கிட்டுமென்றும் அவர்களுக்கு அல்லாஹ் வாக்களித்துள்ள சுவர்க்கம் சித்தமாக்கப்பட பிரார்த்திப்போம் என்றும் மக்களது உள்ளங்களை உருகச்செய்யும் இவ்வாறான விபத்துக்களை கட்டுப்படுத்த அறிவுலகம் ஆக்கப்பணி புரிதல் வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

ஜனஸாத் தொழுகையை கதீப்மார்கள் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளைச்செயலாளர் மௌலவி ஓ. எம் அப்துல் ரஸ்ஸாக் நடாத்தினார் விசேட துவாட்-பிரார்த்தனையை கதீப்மார் சங்கத்தின் தலைவர் மௌலவி கே எம். எச். காலிதீன் நிகழ்த்தினார். [இ]

## பஸ்டிப்போ திருத்தப்படும்

[கிளிநொச்சி]

மழைகாலங்களில் படுமோசமான நிலைக்கு மாறும் கிளிநொச்சி பொது பஸ் தரிப்பு நிலையத்தை செப்பனிடுமாறு கோரி கரடிப்போக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள புனித இயூஜின் சனசமூக நிலையம் கிளிநொச்சி பஸ் டிப்போ முகாமையாளருக்கு அனுப்பிய கடிதத்திற்கிணங்க உடனடியாகத் திருத்த வேலைகளை எடுக்கும்படி டிப்போ முகாமையாளர் பட்டணசபை ஆணையாளரைக் கேட்டுள்ளார்.



### ஆயிரக்கணக்கானோர் கண்ணீர் உகுக்க

# இராணுவ மரியாதையுடன் ஜனஸா நல்லடக்கம்

ஜகார்த்தா, நவ. 19 இலங்கையில் நிகழ்ந்த விமானவிபத்தில் மரணமான வர்களில் 173 யாத்திரிகர் களின ஜனஸாக்கள் இரா ணுவ மரியாதையுடன் ஜகார்த்தாவில் நடை பெற்றன 600 இராணுவ வீரர்களும் 400 பொலி சாரும் மரியாதை செலுத்த ஆயிரக்கணக்கானோர் கண்ணீர் வடித்து நிற்க ஜனஸா நல் லடக்கம் இடம்பெற்றது பெரும்பாலான யாத்திரிகர் களின் சடலங்கள் அடை யாளம் காணமுடியாது உருக்குலைந்த நிலையில் இருப் பதால் ஒருங்கே நல்லடக்கம் செய்யப்பட்டதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

38 யாத்திரிகர்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்ட னர் எனத் தெரிவிக்கப்பட் டது. (உ)

### தமிழக அரசின்

# வெள்ளத்தடுப்பு

## நடவடிக்கை ஆரம்பம்

சென்னை, நவ 19 தமிழ்நாட்டில் வெள்ளத் தடுப்புக்கான நீண்டகால நடவடிக்கை ஆரம்பிக்கப்பட் டுள்ளது

சாலைகள், ஆறுகள், குளங் கள் முதலானவற்றை வலுப் படுத்தும்வகையில் நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டது ஆற்றங்கரைகளில் உடைப்பு களை சீர்படுத்துவதற்கு 23 லட்சம் ரூபா செலவிடப்பட் டுள்ளதாகவும் சாலைகளை வலுப்படுத்துவதற்கும் இதே அளவு தொகை செலவிடப் பட்டுள்ளதாகவும் அரசுசார் பில் தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

இந்த வகையில் மேலும் 2 கோடி ரூபா தேவைப்படு வதாகவும் கூறப்பட்டது

இது இவ்வாறு இருக்க தமிழக அரசின் சிறப்புப் பிரதி நிதியாக புதுடில்லியில உள்ள திரு கே ராஜாராம் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிரத மர் திரு மொரார்ஜிதேசாய் பல்வேறு துறைகளையும் சேர்ந்த மத்திய நிபுணர் குழு ஒன்றை வெள்ளச்சேதம் பற்றி அறிந்து கொள்ள தமிழ்நாட்டுக்கு அனுப்ப விருக்கின்றார்

இக்குழு இம்மாதம் 24ம் திகதி தமிழ்நாடு வரவிருக் கிறது.

### ராஜாஜி வாழ்க்கைச் சரித நூல்

புதுடில்லி, நவ 19 மூதறிஞர் ராஜாஜியின் வாழ்க்கை வரலாறு அடங்கிய முதல்நூலை ஜெயப்பிரகாஷ் நாராயண் பட்னாவில் நேற்று வெளியிட்டுவைத்தார்

பிரதமர், ஜனாதிபதி ஆகி யோர் இந் நூல் வெளியீடு குறித்து சிறப்புச்செய்தி வெளியிட்டுள்ளனர். (உ)

## எகிப்தின் புதிய ஆலோசனை: இஸ்ரேல் நிராகரிக்கும்?

லண்டன், நவ. 19 இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் பாலஸ் தீனிய விவகாரத்தையும் சேர்க்கவேண்டும் என்ற எகிப் தின் புதிய ஆலோசனையை இஸ்ரேலிய அமைச்சரவை நிராகரிக்கும் என அறிக்கை கள் தெரிவிக்கின்றன. எகிப் தின் இப் புதிய ஆலோ சனையை இஸ்ரேலிய பாது காப்பு அமைச்சர் திரு வைஷ் மன் இஸ்ரேலிய அமைச்சர வையில் சமர்ப்பித்துள்ளார்.

அமைச்சரவை இன்று கூடி இதுபற்றி ஆராயவிருந்தது. [உ]

### தபாலகம் தரமுயர்வு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால் அலு வலகம் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் முதலாம் தர தபால் அலுவலகமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது

இதன் மூலம் இதுவரைகா லமும் இந்த அலுவலகத்தில் நிலவி வந்த ஊழியர் பற்றாக் குறை நிவர்த்தி செய்யப்படு மென எதிர்பார்க்கப்படுகின் றது. [உ]

### அவிசாவளை தேர்தல் மனு நிராகரிப்பு

[கொழும்பு]

அவிசாவளை தேர்தல் ஆட் சேப மனுவை மேன்முறை யீட்டு நீதிமன்றம் நிராகரித்தது

மனுதார் வழக்குக்காக செலுத்திய கட்டுப்பணம் போ துமானதாக இல்லையென்று நிராகரிப்பிற்கான காரணம் எனத்தெரிவிக்கப்பட்டது [உ]

### ★ கூச்சல் ★ முட்டைவீச்சு

# இந்திராவின் இரண்டாவது கூட்டம் குழப்பத்தில் முடிவு

லண்டன், நவ. 19 பாரதத்தின் முன்னாள் பிர தமமந்திரி திருமதி இந்திரா காந்தி கலந்துகொண்டு பேச விருந்த இரண்டாவது கூட்ட மும் குழப்பத்தில் முடிந்தது.

லண்டனில் இரண்டாவது தடவையாக ஒழுங்குசெய் யப்பட்டிருந்த இக் கூட்டத் தில் அவரது பேச்சை கேட்க முடியாதிருந்தது.

திருமதி காந்தியின் மோட் டார் வாகனத்திற்கு கோழி முட்டைகள் வீசப்பட்டன.

இக் குறுக்கீடுகளில் அவரது பேச்சைக் கேட்கமுடியாதிருந் தது

நேருஜி பிறந்ததினவிழா வில் கலந்து லண்டன் வந் துள்ள இவரை பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் எட்வேட் ஹீத், எதிர்க்கட்சித் தலைவி தச்சர் ஆகியோர் சந்தித்து உரையாடினர் என்பது குறிப் பிடத்தக்கது. (உ)

### கிரிக்கட்டெஸ்ட்: மியன்டாட் - 100

கராச்சி, நவ. 19 இந்திய பாக் 3வது இறுதி கிரிக்கட் டெஸ்டடின் 4வது நாளான இன்று ஆட்ட நேர இறுதியில் இந்தியா தனது 2வது இன்னிங்சில் 2 விக்கட் நஷ்டத்திற்கு 131 ஓட்டங் களை பெற்றது கவாஸ்கர் 67 ஓட்டங்களுடனும் கிருமானி 01 ஓட்டங்களுட னும் ஆடிக்கொண்டிருக்கின்ற னர். நாளை ஞாயிற்றுக்கிழமை ஆட்டத்தின் இறுதிநாளாகும்.

6 விக்கட் இழப்புக்கு 339 ஓட்டங்களுடன் இன்றைய ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் இடைவேளைக் குப் பின் 9 விக்கட் நஷ்டத் திற்கு 481 ஓட்டங்களைப் பெற்றதுடன் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது, மியன் டாட 100 ஓட்டங்களையும் முஸ்ராக் முசம்மட் 77 ஓட்டங் களையும் பெற்றது குறிப்பிடத் தக்கது.

ஸ்கோர் விபரம் இந்தியா 334 2—131. பாகிஸ்தான் 9—481. (இ)

### வர்த்தமானியின்றி ஏமாற்றம்

(சோண்டாவில்)

கொக்குவில் கிராமசபை யில் அமைந்துள்ள நூலகத் தில் இன்னும் கடந்த மாதம் 13ம் திகதி வெளிவந்த வர்த்த மானி வாசகர்களின் பாவ னைக்கு வரவில்லையாம்.

வர்த்தமானியை முக்கிய மாக மாணவர்கள் தேடிச் சென்று ஏமாற்றமடைகிறார் கள்.

இவ் வர்த்தமானியில்தான் தொழில் நுட்ப நிறுவனங்க ளுக்கு அனுமதி கோரும் பயிற்சிநெறிகளும் விண்ணப் பம் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களும் வந்துள் ளன ஆனால் இங்கு இவ்வர்த்த மானி வரவில்லையென்று தெரி விக்கப்படுகின்றது.

வாசகர் ஒருவர் நூல கரிடம் எழுத்துமூலம் வர்த்த மானி வரவில்லையென்று கடி தம் பெற்று கடிதத்துடன் மேலிடத்துக்கு கொண்டு சென்று கதைத்தபொழுது அவர்கள் தாம் எதுவும் செய்வ தற்கில்லை எனக் கூறினராம் இதேவேளை கொக்குவில் பகுதி மக்கள் நலன்கருதி நிறுவப் பட்ட இந்நூலகத்தில் ஏனைய சஞ்சிகைகளும் தாமதமாகவே வருகின்றன என அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (உ)

# வல்வை பெ. ஆ. சங்கக் குழு மந்திரியைச் சந்திக்கும்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை பெற்றோர்-ஆசி ரியர் சங்கத் தூதுக்குழு ஒன்று பாடசாலையின் சில தேவைகள் குறித்து கல்வியமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்னவைச் சந் தித்து உரையாடவுளது.

இது இவ்வாறுஇருக்க, இவ் வித்தியாசாலையில் தற்போது 6ம் வகுப்புக்கு மேலும் வகுப்பு கள் நடைபெறுகின்றன.

கல்வியமைச்சரிடம் தெரிவிக் கப்பட்டதையடுத்து அமைச் சரின் உத்தரவின்பேரில் வட மாநில வித்தியாதிபதி இந் நடவடிக்கையை எடுத்துள் ளார் இந்நடவடிக்கை குறித்து மாணவர், பெற்றோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இப்பாட சாலையில் இருந்து இடமாற் றம் செய்யப்பட்ட ஐந்து ஆசிரி யர்களில் மூன்று ஆசிரியர் களின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது

அதிபர், மற்றும் ஆசிரியர் ஆகியோரது இடமாற்றங்களை யும் ரத்துச்செய்யுமாறு பெற் றோர்-ஆசிரியர் சங்கம் கல்வி யமைச்சரையும் வித்தியாதி பதியையும் கோரியுள்ளது (உ)



# 3 லட்சம் மண்வெட்டிகள், 5,000 உழவு இயந்திரங்கள்

## அரசு மேலும் இறக்குமதி செய்கிறது

(கொழும்பு)

மூன்று லட்சம் மண்வெட்டிகளையும் ஐயாயிரம் இரண்டு சக்கர உழவு இயந்திரங்களையும் அரசாங்கம் மேலும் இறக்குமதி செய்யவிருக்கிறது

அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனமும், உழவு இயந்திரக் கூட்டுத்தாபனமும் இவற்றை இறக்குமதிசெய்யுமென வர்த்தக, கப்பற் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

விவசாயிகளின் வசதிகளை அதிகரிப்பதன் பொருட்டே இவை இறக்குமதிசெய்யப்படுகின்றன என்றும் சொன்னார் அவர்.

இரண்டு லட்சம் மண்வெட்டிகளும், 2 836 உழவு இயந்திரங்களும் ஏற்கனவே இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

யாழ். பாடசாலைகளின் மோதல்:

## மூன்றும் பிரிவில்மகாஜனு; 2-ம் பிரிவில் ஒஸ்மானியா

(யாழ் விளையாட்டுநிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப் போட்டியின் கால் இறுதி ஆட்டத்தில் கலந்துகொண்ட இரு கல்லூரிகளின் முடிவுகள் வருமாறு!

3ம் பிரிவில் மகாஜனக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரியை 2-1 கோலால் வெற்றியீட்டியது.

2ம் பிரிவில் ஒஸ்மானியாக் கல்லூரி 1-0 கோலால் உரும்பராய் இந்துக் கல்லூரியை வெற்றியீட்டியது.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக திரு. ஆர். மகேந்திரன், திரு. தர்மகுலசிங்கம் ஆகியோர் கடமையாற்றினார்கள். (இ)

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

சடந்த நான்கு ஆண்டுகளாக அளவெட்டி தபால் அலுவலக அதிபராக கடமையாற்றிய திரு க. வி. மயில்வாகனம் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் களுவாஞ்சிக்குடி தபால் அலுவலக அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதம தபால் அலுவலகத்தில் கடமையாற்றும் திரு. வி. கார்த்திகேசு அளவெட்டித் தபால் அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ)

0 0 0

(நாவன்மார்கட்டு)

திருநெல்வேலி கிராம சேவையாளர் பிரிவில் பலகாலமாக கிராமசேவகராக கடமையாற்றிய எஸ். செல்வரெத்தினம் நயினாதீவு 8 சே. பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்ட க. பாக்கியராஜா கிராமசேவகராக நியமனம் பெற்றுள்ளார்.

●

(நாவன்மார்கட்டு)

நல்லூர் கிராம சேவையாளர மூ. மயில்வாகனம் அரியாலைமேற்கு கிராமசேவையாளர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அரியாலை மேற்கில் கடமையாற்றிய க. வசந்தகுமார் நல்லூர் கிராமசேவகர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

நல்லூர் சங்கிலி அரசன் சனசமூகநிலையங்கள் மூ மயில்வாகனத்தின் இடமாற்றத்தை ரத்து செய்யுமாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளன.

## மாணவியின் நற்பண்பு

(பண்டத்தரிப்பு)

கல்லூரிக்கு பஸ்ஸில் பிரயாணஞ்செய்த மாணவி ஒருவர், அந்த பஸ்வண்டியில் இடந்த கைக்கடிகாரம் ஒன்றைக் கண்டெடுத்து, பிரஸ்தாபக் கல்லூரி அதிபரிடம் ஒப்படைத்த சம்பவம் அளவெட்டியில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தி லிருந்து பண்டத்தரிப்பிற்குச் செல்லும் 798ம் இலக்க பஸ்வண்டியில் பிரயாணஞ்செய்த அளவெட்டி அருணோதயக்கல்லூரி மாணவி ஒருவர், அந்த பஸ்ஸில் ஒரு விலையுயர்ந்த கைக்கடிகாரம், அநாதரவான நிலையில் விடப்பட்டிருந்ததைக் கண்டெடுத்து பிரஸ்தாபக் கல்லூரி அதிபரிடம் விடயத்தைக் கூறி ஒப்படைத்துள்ளார்.

இக்கடிகாரத்தைத் தவறவிட்டவர் அடையாளங்களைக் கல்லூரி அதிபரிடம் தெரிவித்துத் தமது கடிகாரத்தைப் பெற்றுக் கொள்ளமுடியுமென தெரிவிக்கப்படுகிறது. இம் மாணவியின் பண்பு பாராட்டப்பட்டுள்ளது. (உ)

## சிரமதானமூலம் வாய்க்கால் திருத்தினர்

[நீர்வேலி]

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர்களும், பெற்றார்களும் கூட்டாக இணைந்து கல்லூரிக்கு அண்மையிலுள்ள வெள்ள வாய்க்கால் ஒன்றைச் சிரமதானமுறையில் பகல், இரவு என்று பாராமல் திருத்தி அமைத்தார்கள்.

இந்த வெள்ளவாய்க்காலில் மழைகாலங்களில் நீர் தேங்கி நின்று பள்ளிக்கூட மாணவர்களும், ஆசிரியர்களும், மற்றும் பொதுமக்களும் போக்குவரவு செய்ய முடியாமல் இருந்தது.

பழைய மாணவர் சங்கச் செயலாளர் த. சிவசுப்பிரமணியம், பொருளாளர் த பரராசசிங்கம், பெற்றார்-ஆசிரியர் சங்க செயலாளர் கலைவ தியாகராஜா, கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர் க கிருபாகரன் ஆகியோரின் முயற்சியால் இச்சிரமதானம் நிறைவேறியது. [அ]

## "தன்னலமற்று வாழ்ந்தவர்"

[வண்ணார்பண்ணை]

"இனவிடுதலை இயக்கங்களில் தொண்டனாகவும் சமூக சேவையிலும் பொதுப்பணிகளிலும் தன்னலமற்ற சேவையாளனாகவும் இறுதிவரை வாழ்ந்தவர் திரு அருமைநாதர். இவரது சேவை உணர்வை நாம் இனிமேல் காண்பது அரிது".

இவ்வாறு பிரபல சமூக சேவையாளரும் இனவிடுதலை இயக்கங்களில் முன்னோடியாக திகழ்ந்தவருமான திரு. அருமைநாதரின இறுதிக்கிரிகையின் பின் நாரந்தனையில் உள்ள அவரது இல்லத்தில் நிகழ்ந்த இரங்கல் கூட்டதில் உரையாற்றிய தமிழர் சுயாட்சிக்கழகத்தின் தலைவரும் முன்னாள் ஊர்காவற்துறை எம்பியுமான திரு வ. நவரத்தினம் தமது இரங்கலுரையில் தெரிவித்தார்.

வேலணை திரு.பா. சண்முகநாதன் தலைமையில் நடந்த மேற்படி கூட்டத்தில் திரு வ. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் அன்னாரதுமறைவு தீவுப்பகுதிமக்களுக்கு மட்டுமல்ல இனவிடுதலையைவிரும்புகின்ற எமது மக்களுக்கு பெரும் நஷ்டமாகும். கடந்த கால இனவிடுதலைப்போர்களில் சகல விதத்திலும் தோள்கொடுத்தவர்களில் இவரும் ஒருவராவார். இவரது மறைவு குறித்து இவரது குடும்பத்தாரைப் போலவே நாமும் துயருகின்றோம் என்றார். (உ)

## இன்றைய இராசிப்பலன்

கார்த். மாதப் 4-ந் திகதி திங்கட்கிழமை (20-11-78)

மேடம்:- தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழியேற்படலாம் இதன் மூலம் பதவி உயர்வும் கிடைக்கலாம், சிறப்பான தினம்.

இடபம்:- இன்று அதிக ஆதாயம் கிடைக்கும், புதுத் தொழில் முறைகளை மனம் நாடும், பொருள் வரவிற்கும் பெரியோர் ஆதரவிற்கும் இடமுண்டு.

மிதுனம்:- பொருளாதாரத் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும், புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும், தொழில் துறையில் கவனம் செலுத்தவும்.

கடகம்:- இலட்சியக் கனவுகள் இன்று கானல் நீராக மாறும், பின்னணியில் பிளவுக்கிடமுண்டு, எதிர்பாராத விளைவுக்கும் இடமுண்டு. எதிர்பாராத விளைவுக்கும் இடமுண்டு, அவதானம் நன்று.

சிங்கம்:- சொற் சிலம்பம் ஆடுவதன் மூலம் மற்றவர்களைச் சொக்கவைப்பீர்கள், குடும்பத்தில் அமைதி நிலவும், சுமுகமான நாள்.

கன்னி:- ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும், எதிலும் விரக்தி மனப்பான்மை தோன்றும், முன்யோசனையுடன் செயலாற்றுக.

துலாம்:- பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும், இதயச் சுமை அகலும், தாய்வழி ஆதரவும் கிடைக்கும், திறமைக்குரிய முதலிடம் கிடைக்கும்.

விருச்சிகம்:- புதிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கு சிலர் முனைவர், புத்திரர் வழியாக புதினமும் கிடைக்கும், புதுமையான எண்ணங்களும் தலைதூக்கும்.

தனுசு:- முயற்சிகளில் சிக்கல்கள் தோன்றும். அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர், மேலதிகாரிகளின் கட்டளைக்குப் பணிந்து நடக்கவும்.

மகரம்:- நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்படும், களத்திர வழியால் மகிழ்ச்சிக்கிடமுண்டு சுகபோக நாள்.

கும்பம்:- உறவுமுறைகளில் பிளவுகள் தோன்றக் கூடும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும், தொழில்துறையிலும் கவனம் செலுத்தவும்.

மீனம்: நினைத்தது நடக்கும், பிதாவழிமூலம் எதிர்பாராத பொருள் வரவிற்கிடமுண்டு, இல்லத்திலும் இனிமை தவழும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## அடையாள விளக்கு நிறுவப்படும்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச்சங்கம் மாதகல் மேற்கு டளியந்துறையில் மீனவர்களின் நலன்கருதி வெளிச்சம் காட்டும் அடையாள விளக்கொன்றை விரைவில் நிறுவுவதென தீர்மானித்துள்ளது. (அ)


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30 9-30
முத்துராமன்-சுஜாதா
முத்தான முத்தல்லவோ

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
பெண் தெய்வம்

Rio
Daily 4 Shows
Michael Caine in
KIDNAPPED
(Mistery—Thrill)

ராஜா (யாழ். நகர்)
இன்று மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
மரிக்கார் ராமதாஸ்
ஹெலன் குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து
ஏமாளிகள்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
திருடாதே [புதிய பிரதி]

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
4-வது ஜனத்திரள் வாரம்
சிவராம் சந்திரகலா தனரத்தினம்
நடித்த
அநுராகம்
சிவாஜிகணேசன்
பைலட் பிரேம்நாத்
இலங்கை விஜயம்பற்றிய செய்திப்படம்

REGAL
(Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m.
Sidney James, Kenneth Williams
in
'CARRY ON MATRON'
(Color)

மனோகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்
சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

சாந்தி (யாழ் நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி... விஜயா... நெஞ்சிருக்கும்வரை
புதிய பிரதி
Screening Shortly "Blood Money"

ராணி [யாழ். நகர்]
வீரபாண்டிய கட்டபொம்மனின் தொடர்காவியம்
எஸ். எஸ். ஆர்- வீரப்பா
குமாரி கமலா- டி. கே. பகவதி-ராஜம்
நடித்த
சிவகெங்கைச் சீமை, புதியபிரதி

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
கல்யாணிக்கு கல்யாணம்
அடுத்தவெளியீடு: லலிதா

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7696 தினசரி 4காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

## வாழ்க்கையில் விரக்தி: இளைஞன் தற்கொலை!

[கொடிகாமம்]

வாழ்க்கையில் விரக்தி காரணமாகத் தற்கொலைசெய்வதாகக்கடிதம் எழுதிவைத்து விட்டு, மீசாலை வடக்கைச் சேர்ந்த பொ கிருஷ்ணமூர்த்தி என்ற இளைஞர் தற்கொலை செய்துகொண்டார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. சி பாலகிட்ணர் மரண விசாரணை நடத்தினர்

இவர் உமையாள்புரத்தில் விவசாயம் செய்துவந்தாரென்றும் சம்பவதினம் அங்கிருந்து மீசாலை வந்து இரவு வீட்டைவிட்டு வெளியேறி மாமியார் வீட்டுக்கிணற்றுக்குள் வீழ்ந்தாரென்றும் விசாரணையில தெரியவந்துள்ளது.

மறுநாள் காலை, கிணற்றடிக்குச் சென்ற மாமனார் சந்தேகப்பட்டு கிணற்றுநீரை யந்திரம் மூலம் வெளியேற்றியபின் கிருஷ்ணமூர்த்தியின் சடலம் கிடப்பதைக் கண்டுபிடித்தார்

விசாரணையின்பின் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [க-அ]

## விரிவுரையாளர் வரவில் ஒழுங்கீனம்?

(கோண்டாவில்)

யாழ். பல் தொழில் நுட்ப நிறுவன உயர்தேசிய வணிக தகுதித்தேர்வு மாணவர்களின் வகுப்புகளுக்கு விரிவுரையாளர்கள் ஒழுங்காக செல்வதில்லையென உயர் தேசிய வர்த்தக கணக்கியல் மாணவமன்ற உறுப்பினர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

தமது பயிற்சி நெறி நான்கு வருட பயிற்சிநெறி யென்றும் மிகவும் கூடிய அளவிலாடுன பாட விதானத்தைக் கொண்ட பயிற்சிநெறி என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் முக்கியமாக முதலாம் வருட மாணவர்களுக்கும் சில விரிவுரையாளர்கள் நிறுவனத்திற்கு வந்தும் வகுப்புகளுக்கு செல்வதில்லை என்றும் இத்துடன் இவ்வாரத்தில் இறுதி வருட மாணவர்களின் உரிய வகுப்புகள் விரிவுரையாளர்கள் வராமையினால் மாணவர்கள் வந்தும் திரும்பிச் சென்றுள்ளார்கள் என்றும் அவர் சொன்னார்.

முதலாம் வருட மாணவர்களுக்கு இன்னும் அவர்களுக்கான தினவரவு இடாப்புக்கூட வகுப்புகளுக்கு அனுப்பப்படவில்லையாம் இத்துடன் நண்பகல் நேரத்துக்கு மேல் மாணவர்களுக்கு வகுப்புக்கள் இருந்தும் கூட நிறுவனம் வெறிச்சோடிக் கிடக்கின்றது என தெரிவிக்கப்படுகின்றது இதே நிலையானால் தொழில்நுட்ப நிறுவனத்தின் எதிர்காலம் எப்படி அமையுமென மாணவர்கள் கேட்கின்றார்கள் (உ)

## "தூய்மையான கடமை மகிழ்ச்சி தரும்"

(இமையாணன்)

"கடமையைச் சரிவரச் செய்யவேண்டும் சரிவரக் கடமையைச் செய்வதுடன் பலனை எதிர்பார்க்காமல் செய்யவேண்டும் அப்படிக் கடமையைச் செய்தால்தான் சந்தோஷமடையலாம்"

இவ்வாறு கல்வியமைச்சின் ஆசிரிய பயிற்சிக் கிளைக் கல்விப் பணிப்பாளரான திரு ஆர். எஸ் பள்ளியக்கரா கொழும்புத்துறை ஆசிரியகலாசாலைக்கு விஜயம் செய்து உரை நிகழ்த்தும்போது கூறினார்

கலாசாலை அதிபர் திரு கே. ஜெயராசா தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

அவர் மேலும் பேசும்போது கூறியதாவது:

"யாழ்ப்பாணத்தில் பல ஆசிரியகலாசாலைகள் இருந்தாலும் நான் முதலில் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலைக்குத்தான் விஜயம்செய்வேன்" என்றும் 'வேலை செய்யும் பொழுது சந்தோஷமாய் இருத்தல் நன்று' என்றும் கூறினார்.

மற்றும் பலரும் பேசினார் [உ]

## "6-வது அணிசேரா மாநாடு:

# கறுப்பர் உரிமைகள் வலியுறுத்தப்படும்

## கியூபா அமைச்சர் தகவல்

(கொழும்பு)

ஹவானாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 6-வது கூட்டுச் சேரா மகாநாட்டில் நமீபியா, சிம்பாரல ஆகிய குடியேற்ற நாடுகளில் வாழும் கறுப்பு இன மக்களுக்கு உரிமைகளையும் வழங்கி அந்நாடுகளுக்கு சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படும்.

இவ்வாறு கியூபா வெளிநாட்டு அமைச்சர் திரு இஸிடோரோ மல்மியர் கபியேலி கொழும்பில் நடந்த நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

6-வது கூட்டுச்சேரா மகாநாட்டுக்கு முன்னர் மொஸாம்பிக் தலைநகரான மொபுட்டோவில் நடைபெறவுள்ள ஆரம்ப மகாநாட்டுக்கு ஆதரவு தேடி மடகாஸ்கார், தான்சானியா மொஸாம்பிக் ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்துள்ள இவர் இங்கிருந்து இந்தியா செல்கிறார்.

கூட்டுச்சேரா இயக்கம் இடதுசாரி இயக்கமாக மாறி வருகிறது என்ற நிருபர் ஒருவரின் கேள்விக்கு, ஏகாதிபத்திய வாதிகளே இவ்வாறு குரல் எழுப்புகின்றனர் என்றார்.

ஹவானாவில் நடைபெறவுள்ள 6-வது கூட்டுச்சேரா மகாநாட்டிற்கு முதன் முதல் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கே முதலில் அழைப்பு அனுப்பப்படும் என்றும் அவர் கூறினார். (மு-இ)

## மீண்டும் இங்கு உயர்வகுப்புகள்

(உடுப்பிட்டி)

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையில் மீண்டும் ஆறும் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரஸ்தாப வித்தியாசாலையில் கடந்த ஆறுமாதகாலமாக ஆறும் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புக்கள் நடாத்தப்படாததினால் இவ்வித்தியாசாலையின் 110 மாணவர்கள் தொடர்ந்து கல்விபயில முடியாது அவதியுற்றுவந்தனர்.

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் முயற்சியைத்தொடர்ந்து கல்வியமைச்சு ஆறுமாதகாலமாக நிறுத்தப்பட்டிருந்த ஆறும் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகளை மீண்டும் நடாத்த கல்வியமைச்சு அனுமதியளித்துள்ளது. [அ]



## லண்டன் சென்றார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத்தின் முதலாவது விஞ்ஞான பட்டப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் ஒருவரான ஆறுமுகம் ஆனந்தேஸ்வரன் முதுமாணி கம்பியூட்டர் விஞ்ஞானப் படிப்பை மேற்கொண்டு லண்டன் சென்றுள்ளார்.

இவர் யாழ். மத்தியகல்லூரியின் பழைய மாணவரும் யாழ் கொட்டடி நமசிவாயம் கனிஷ்ட மகா வித்தியாலய அதிபர் திரு தம்பையா ஆறுமுகத்தின் மகனுமாவார்.

## புங்குடுதீவில் வெள்ள நிவாரணம்

(வேலணை)

அண்மையில் பெய்த கடும் மழையினாலும், வீசிய பலத்த காற்றினாலும் புங்குடுதீவின் மேற்குப் பகுதியும் மத்தியபகுதியும அதிகமாக சேதத்திற்குள்ளாகியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது

இந்தப் பகுதியில் குடியிருந்தவர்கள் அருகாலயிலிருந்த பாடசாலைகளில் தஞ்சமடைந்திருந்தனர் சேதத்திற்குள்ளான பகுதிகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு வயனல் பெர்னாண்டோநேரில் சென்று பார்வையிட்டதைத் தொடர்ந்து உடனடியாக நிவாரணங்களை தாமதமின்றி வழங்குமாறு கட்டளை பிறப்பித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து நிவாரணங்களை வழங்குவதற்கும் சேதம்பற்றி மதிப்பீடு செய்வதற்கும் 15 பேர் அடங்கிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை அரசாங்க அதிபர் நியமித்திருக்கின்றார் என்பது தெரிந்ததே

இவர்கள் வேலணை உதவி அரசாங்க அதிபர திரு முத்தம்பிமுத்துவின் தலைமையின் கீழ் இயங்கிவருகின்றனர்

வெள்ளத்தினால் வீடுவாசல்களை இழந்தவர்களுக்கு மீண்டும் வீடுகளைத் திருத்தியும் அமைப்பதற்குமென அரசாங்கம் கடனுதவிகளையும் செய்ய முன்வந்திருக்கின்றது எனத் தெரிவிக்கபட்டது

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒருவாரப்பங்கீட்டுப் பொருட்களை இலவசமாக வழங்கவும் அரசு முன்வந்திருக்கின்றது.

குறிப்பாக ஒரு குடும்பத்தில் 5 பேர்களும் அதற்கு மேல் அடங்கியவர்களாய் இருந்தால் ரூபா 30, 4 பேர்கள் வரை இருந்தால் ரூபா 25, 3பேர்கள் இருந்தால் ரூபா 20, 2பேர்கள் இருந்தால் ரூபா 15க்கு பெறுமதியான உணவுப் பொருட்களை அரசாங்கம் வழங்கிவருகிறது. (உ)

## 88-வது வருடாந்தக்கூட்டம்

வேலணை

யாழ்ப்பாண சைவபரிபாலன சபையினரின் 88-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாவலர் சபை மண்டபத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: ச செல்வராஜா, உபதலைவர்: நம சிவப்பிரகாசம், செயலாளர்: த. சண்முகலிங்கம், உபசெயலாளர்: மா அமிர்தலிங்கம், இராஜராஜேஸ்வரன், தனாதிகாரி: செந்தில்நாதன் மற்றும் 24 பேர்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (உ)

## இன்று

[யாழ்ப்பாணம்]

காரைநகர் ஈழத்து சிதம்பரம் சிவன் கோவில் சங்காபிஷேக விழா இன்று நடைபெறும். [க]

## தமிழ் இளைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பினர்கள் ஆகியோரும் கலந்து கொள்வர்.

வவுனியாவில் நடைபெறவிருந்த தமிழ் இளைஞர் பேரவை செயற்குழு கூட்டம் பின்போடப்பட்டுள்ளது. [க]

## தமிழ்க் காங்கிரஸ்

1-ம பக்கத் தொடர்ச்சி

நடனசபாபதி தலைமையிலும், கொழும்பிலிருந்து திரு சரவணமுத்து தலைமையிலும் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

## கருத்தரங்கு

தமிழ்க்காங்கிரஸின் கருத்தரங்கு நாளைமாலை நாவற்குளியில் நடைபெறவிருக்கின்றது.

## குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஆதரவு

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு அதிக ஆதரவு கிடைத்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நவீன குடும்பக்கட்டுப்பாட்டுத் தடுப்புமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது

பருத்தித்துறை சுகாதார வைத்தியஅதிகாரி டாக்டர் கே எம் வேலும்மயிலும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்

தற்போது ஊசிமருந்து மூலம் குடும்பக்கட்டுப்பாடு செய்யும் நவீன சிகிச்சை முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதென்றும், இக் கருத்தடைத் தடுப்புமுறையில் குடும்பப்பெண்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதாகவும் முன்னர் பழைய குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளினால்தான் குடும்பப்பெண்கள் கருத்தடை செய்வதற்குத் தயக்கம்காட்டி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மூன்று மாதத்திற்கு ஒரு முறை குடும்பப்பெண்கள் இந்த ஊசிமருந்து ஏற்றுக் கொள்வதின் மூலம் குடும்பக் கட்டுப்பாட்டை வெற்றிகரமாக செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுளது.

குடும்ப நலத் திட்ட இயக்கத்தினரால் கிராமரீதியாகத் திட்டக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருவதோடு இலவச ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (கு)

## மலர் வெளியீடு

(புலோலி)

பருத்தித்துறை இலங்கைத் தமிழாசிரிய சங்க முன்னாள் செயலாளர் காலஞ்சென்ற சி. சி. கணபதிப்பிள்ளையின் நினைவு மலரினை இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாகச் செயலாளர் திரு அ. பொன்னம்பலம் வெளியீடு செய்துவைத்தார். கிளைச் செயலாளர் திரு. சி. வின்சன்ற் இரங்கல் உரையை நிகழ்த்தினார்.

## "பயன்தரு மரங்கள் நாட்டி மண்வளம் பெறுவோம்"

### மரம்நாட்டுவிழாவில் வேலணை ஏ.ஜி.ஏ

(வேலணை)

"எமது வருங்கால சந்ததியினரின் நன்மைகருதி பயன்தரும் மரங்களை நாட்டி வளர்க்க முன்வரவேண்டும் சென்ற தலைமுறையினர் நாட்டி வைத்த மரங்களையும் தானாக வும் முளைத்த மரங்களையும் இன்றைய காலத்தில் நாம் பயன்படுத்திவருகின்றோம்" என்று வேலணைபகுதி உதவி அரசாங்க அதிபர் திரு முத்தம்பி முத்து நேற்று முன்தினம் பளளப்புலம் ஆத்திசூடி வித்தியாசாலையில் நடைபெற்ற மரம் நாட்டு விழாவில் தலைமை வகித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து பேசுகையில், புதிய மரங்களை உற்பத்தியாக்குவாரில்லையாதலால் ஏற்கனவே வறுந்திரம் என்று கருதப்படும் எமது பகுதி முன்னரைவிட கூடிய வறுந்திரமாக மாறக்கூடிய சூழ் நிலை ஏற்பட்டுவருகின்றது எனவே இனிமேலாவது இந்த நிலையை மனதில் வைத்து புதிய நல்ல பயன் தரத்தக்க மரங்களையும் நிழல் மரங்களையும் நாட்டி வளர்க்க முன்வரவேண்டும்.

இத்தவகையில் வேலணை சோளவத்தை பள்ளப்புலம் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் ஏற்பாடு செய்த இன்றைய மரம் நாட்டு விழா மிக முக்கியமானதாகும்

வேலணைப்பகுதியில் இந்த மரம் நாட்டு விழாவைப் பெருமளவில நடாத்த திட்டமிட்டு மழையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம் இந்தச் சந்தர்ப்பத்தை கிராம முன்னேற்றச் சங்கத்தினர் பயன்படுத்திக் கொண்டதை பாராட்டுகின்றோம்" என்றார்

இவ்விழாவில் ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் கா பொ இரத்தினம், தொழிற்கை அதிபர் திரு கனகராசா, வேலணைப்பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு அ. சிதம்பரப்பிள்ளை உட்பட பலர் கலந்துகொண்டு மரம் நாட்டு விழாவின் பயன்கள் பற்றிப் பேசினர்.

விழாவில் கலந்துகொண்டவர்களுக்கு கி. மு. சங்கச் செயலாளர் திரு பெ பேரின்பநாயகம் நன்றி கூறினார். ரமேஷ் வைகுந்தநாதனின் இன்னிசையும் இடம் பெற்றது. (உ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389, Registered as a Newspaper in SriLanka.